செய்தி வெளியீடு எண் : 1004 நாள் : 20.07.2024

# செய்தி வெளியீடு

**மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் அவர்கள், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பரமணியன் அவர்களின் முன்னிலையில், நடப்பு கல்வி ஆண்டில், 11–ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தினை, சென்னை சைதாப்பேட்டை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் தொடங்கி வைத்தார்.**

தமிழ்நாடு அரசு, மேல்நிலைக் கல்வி பயிலும் மாணவ – மாணவியர் சிரமமின்றி பள்ளிக்கு செல்லும் வகையில் அரசு, அரசு உதவி பெறும் மற்றும் பகுதியாக அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 11–ஆம் வகுப்பு பயிலும் அனைத்து மாணவ – மாணவியருக்கும் ஆண்டுதோறும் மிதிவண்டிகள் வழங்கி வருகிறது.

கடந்த மூன்று ஆண்டுகளில் 823.09 கோடி செலவில் 16,73,274 மாணவ, மாணவியர்களுக்கு மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, பள்ளிகள் திறந்த உடன், மாணாக்கர்களுக்கு மிதிவண்டிகள் வழங்க துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, அதன்படி, நடப்பு கல்வியாண்டில் சுமார் 264.10 கோடி ரூபாய் செலவில், அரசு, அரசு உதவி பெறும் மற்றும் பகுதியாக அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 11–ஆம் வகுப்பு பயிலும் 5,47,676 மாணவ /மாணவியர்களுக்கு மிதிவண்டிகள் வழங்கப்படவுள்ளன.

இதன் துவக்கமாக, இன்று (20.07.2024), சென்னை, மேற்கு சைதாப்பேட்டையில் அமைந்துள்ள சென்னை பெண்கள் மேல்நிலை (மாந்தோப்பு) பள்ளி வளாகத்தில் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் மற்றும் மருத்துவம் (ம) மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்

பெருமக்கள், 10 மாணாக்கர்களுக்கு மிதிவண்டிகளை வழங்கி 2024 – 2025 ஆம் கல்வி ஆண்டிற்கான திட்டத்தினை துவக்கி வைத்தனர்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் திரு.சா.விஜயராஜ்குமார், இ.ஆ.ப., பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆணையர் திரு.தி.ந.வெங்கடேஷ், இ.ஆ.ப., மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை ஆணையர் திரு.வா.சம்பத், இ.ஆ.ப., சிறுபான்மையினர் நல இயக்குநர் திருமதி மு.ஆசியா மரியம் இ.ஆ.ப., சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி. ரஷ்மி சித்தார்த் ஜகடே, இ.ஆ.ப., பள்ளி கல்வித்துறை இயக்குநர் திரு.கண்ணப்பன், பெருநகர சென்னை மாநகராட்சி (தெற்கு) மண்டல துணை ஆணையர் திரு.பிரவீன்குமார், இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி கல்வி நிலைக்குழு தலைவர் திரு.விஸ்வநாதன், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல குழு தலைவர்கள் திரு.எம்.கிருஷ்ணமூர்த்தி மற்றும் திரு.துரைராஜ், பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் திரு.ஸ்ரீதர், திரு.சுப்பரமணி, திரு.மோகன் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu